**ரம்புக்கனை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரம்புக்கனை பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 21(உ) பிரிவின் படி உரிய நிறுவனத்தின் பாதிடப்பட்ட தரவுகளுடன் உள்ளபடியான தரவுகள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் நியமத்தின் 21(இ) பிரிவின் பிரகாரம் உரிமை மூலதன மாற்றக்கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்rும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 204,603 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக இந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 633,312 தொகையான தவணைப் பணம் மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 53,450 தொகையான முத்திரைக் கட்டண சேவை ஊக்குவிப்புப்படி நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக செலுத்தவேண்டிய ரூபா 121,000 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 02 காணிகளை விற்பனை செய்ததன் அடிப்படையில் 1 சதவீத வரியாக அறவிடவேண்டிய ரூபா 27,384 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) சப்ரகமுவ மாகாணசபையின் பிரதம செயலாளருக்குரிய ரூபா 8,327,075 தொகையான 12 வாகனங்கள் சபைக்கு உரித்து கையளிக்கப்படாமல் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்

சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக கடப்பாடுகள் காணப்படுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67,458,743 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 59,840,382 ஆனமையால் வேறுபாடு ரூபா 7,618,361 ஆகும்.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியான ரூபா 1,215,837 தொகையில் 84 சதவீதம் அதாவது ரூபா 1,023,550 வருடமொன்றை விட பழைமையானதாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,482,175 ஆக இருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,482,175 கூட்டுத்தொகையான நானாவித கணக்கு மீதிகள் தொடர்பாக ஆதாரப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) சபரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவை | |
| 261.2.2 ஆம் விதி | 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை 05 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 49,622 தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2013 ஒக்தோபர் மாதம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | |
| (i) 1.7 ஆம் பந்தி | ரூபா 90,530 தொகையான ஆதனக் கடன் 2011 ஆகஸ்ட் மாதம் முதல் அறவிடப்படாது நிலுவை மீதியாகக் காணப்பட்ட போதிலும் அக்கடனைச் செலுத்துவதற்குரிய காணியின் உறுதி மற்றும் அட்டோர்னி அதிகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 10.4 ஆம் பந்தி | 10 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத ஒரு பெண் உத்தியோகத்தருக்காக இடர் கடன் செலுத்தும் போது 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த பிணைகாரர் ஒருவர் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி ரூபா 58,300 தொகையான கடன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப் பெண் உத்தியோகத்தர் சேவையை விட்டுச் சென்றதன் காரணமாக அறவீடு செய்யமுடியாதிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,006,363 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,021,408 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,984,955 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம், தண்டப் பணமும் பிடியாணைக் கட்டணமும் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமை, வழங்கல் மற்றும் உபகரணங்கள் செலவினம் மற்றும் மூலதனச்

சொத்துக்களை பழுதுபார்த்தல் செலவினம் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 4,752 | 5,516 | 3,056 |
| (ii) | வாடகை | 7,694 | 7,537 | 564 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,308 | 2,489 | 684 |
| (iv) | ஏனைய வருமானம் | 57,297 | 56,135 | 5,205 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 2,300,635 ஆகவும் ரூபா 6,841,126 ஆகவும் இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) பிரதேச சபைக் கட்டிடத்தின் தரைமாடியின் 2,000 சதுர அடி வீதம் இரண்டு பகுதிகள் சம்பத் வங்கிக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் மாதாந்த வாடகையில் முறையே ரூபா 80,000 உம் ரூபா 75,000 உம் படி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, மற்றும் முத்திரை வரி மாதாந்த வாடகையில் சேர்க்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும் சபை நிதியத்திற்குக் கிடைத்த மாதாந்த வாடகையில் வரி செலுத்தப்பட்டமையின் காரணமாக 2011 மார்ச் முதல் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2013 செப்தெம்பர் மாதம் வரை சபை நிதியத்திற்கு ரூபா 565,554 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் ரூபா 105,716 வரித்தொகை அரசாங்கத்தால் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான பழைய பிரதேச சபைக் கட்டிடத்திற்கு அருகிலுள்ள காணி சபையால் 1980 யூலை மாதம் முதல் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. நிலுவை வாடகைத் தொகையாக ரூபா 216,834 தொகை புகையிரதத் திணைக்களத்திற்கு தீர்க்கப்படாமையின் காரணமாக நீதிமன்ற செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தும் இந்தக் காணிப்பகுதி தனியார் பஸ் தரிப்பிடத்திற்காக சப்ரகமுவ மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரசபையிலிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாத்திரம் ரூபா 815,500

வாடகைப் பணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் வாடகை உடன்படிக்கை இன்றி வழங்கப்பட்டமையால் சட்டரீதியான செயற்பாடுகளை எடுக்கவும் முடியாதிருந்தது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### 3.2.1 ஒப்பந்த நிருவாகம்

2013 ஒக்தோபர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 876,473 தொகையானது பின்னவல வயலின் மத்தியிலுள்ள வீதிக்கு கொங்கீரீட் இடுவதற்குரிய நிர்மாண வேலை விடய இல. 07 இன் படி கொங்கிரீட் இடப்பட்ட வீதியின் இருபக்கமும் 05 கியூப் மண் இட்டு நிரப்பப்பட்டதாக ரூபா 16,575 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அளவிடை அறிக்கைகளின் பிரகாரம் மண் நிரப்பப்படாதிருந்ததுடன் வேலை விடய இல. 08 இன் படி பெயர்ப்பலகையொன்றை பொருத்துவதற்காக ரூபா 6,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெயர்ப்பலகையொன்று பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 372,300 தொகை செலவிட்டு பூர்த்தி செய்யப்பட்ட யானைகள் சரணாலயத்தின் முன்னால் மா ஓயாவிற்குச் செல்லும் வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அதன் வேலை விடய இல. 02 இற்குரிய நிறைவேற்றாத 0.79 கொங்கிரீட் கியூப்பிற்காக ரூபா 31,985 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) ஒப்பந்த நிருவாகம்